4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) நகராட்சி சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகளை அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப்பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்(தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1992-93-அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை வைத்தல், மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் இப்பேரவையின் முன் வைக்கிறேன்.

முற்பகல் 10–55

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1992-93 ஆம் ஆண்டின் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
	A. வருவாய்க் கணக்கில் செலவு.	
1	நிலவரித்துறை	2,47,83
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	1,69,63
3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிருவாகம்	2,48,27
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம்	13,14,22
5	முத்திரைத் தாள்கள்— நிருவாகம்	80,14
6	பத்திரப் பதிவு	5,75,11